**கவனிக்க** .- *04.07.2014 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி* I : *தொகுதி* (III) *பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1871 - 2014 ජූලි මස 11 වැනි සිකුරාදා - 2014.07.11
*1871 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு யூலை மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 776 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 881 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2014, ஓகத்து மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2014, யூலை மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டம் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**பீ. எச். எல். வீ. டீ சில்வா,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2014 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

# பதவிகள் — வெற்றிடம்

## ஹோமாகம பிரதேச சபை

மேல் மாகாண அரச சேவையில் ஹோமாகம பிரதேச சபையில் வெற்றிடமாகவுள்ள கீழ்க்காணும் பதவிகளுக்காக உரிய தகைமைகளைக்கொண்ட மேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடமுடைய விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**ஆட்சேர்ப்பு நிபந்தனைகள் :**

(1) விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் ;

(2) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அண்மித்த மூன்று வருட (3) காலம் மேல் மாகாணத்தினுள் நிரந்தர வதிவிடமுடையவராய் இருத்தல் வேண்டும். (வாக்காளர் பெயர்ப்பட்டியல் மூலம் அல்லது பிரதேச செயலாளரினால் வழங்கப்படும் சான்றிதழ் மூலம் வதிவிடத்தை நிரூபிக்க வேண்டும்);

(3) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (ஏற்கனவே அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள ஊழியர்களுக்கு இந்த உச்ச வயதெல்லை ஏற்புடையதன்று.);

(4) குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதிமன்றத்தினால் தண்டனை வழங்கப்பட்ட ஒருவராய் இருத்தலாகாது;

(5) சிறந்த நன்னடத்தையுடையவராகவும் சிறந்த தேகாரோக்கியமுடைவராகவும் இருத்தல் வேண்டும்;

(6) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு குறித்த தகைமைகள் பூர்த்திசெய்யப்பட்டிருப்பது கட்டாயமாகும்;

(7) தாபன விதிக்கோவை, நிதிப் பிரமாணக் குறிப்புகள் மற்றும் மேல் மாகாண சபையின் ஒழுங்கு விதிமுறைகள் மற்றும் கட்டளைகள் ஆகியவற்றுக்கு ஏற்புடையவாறு செயற்பட உடன்பட வேண்டும்.

02. **விண்ணப்பிக்கும் முறை.-**

(1) விண்ணப்பதாரிகள் இங்கு தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கேற்ப A4 அளவிலான கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி தம்மால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை 2014.07.28 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், ஹோமாகம பிரதேச சபை, ஹோமாகம" எனும் விலாசத்துக்கு கிடைக்கப்பெறும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். குறித்த தினத்திற்கு பின்னர் கிடைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்;

(2) விண்ணப்பம் அடங்கும் கடிதவுறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியை முழுமையாக குறிப்பிட வேண்டும்;

(3) விண்ணப்பத்துடன் கீழ்க் காணும் சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும் :-

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) கல்விச் சான்றிதழ் ;

(iii) வதிவிடம் தொடர்பான பிரதேச செயலாளரது சான்றிதழ் ;

(iv) அண்மையில் பெறப்பட்ட நற்குணம் தொடர்பான இரண்டு சான்றிதழ்கள் (அதில் ஒரு சான்றிதழ் கிராம சேவை அலுவலரிடம் இருந்து பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும்.);

(v) அனுபவம் பற்றிய சான்றிதழ்.

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிடமாக உள்ள பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டமும் சம்பளக் குறியீடும் | கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 1 | சுகாதார மேற்பார் வையாளர் II தரம் | 01 | MN 1 - 2006A ரூ. 13,120-145×10 – 170×11-240×10-10×320-ரூபா 22,040 | (அ) சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம்/எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/உடல் நல இயலும் உடல் கல்வியும் விஞ்ஞானமும் உட்பட (5) ஐந்து பாடங்ககளில் திறமைச் சித்திகள் உட்பட இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாது ஆறு (6) பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.<br>அல்லது<br>(ஆ) சிங்களம்/தமிழ் மொழி மற்றும் கணிதம்/எண்கணிதம்/வர்த்தக எண்கணிதம்/ உடல் நல இயலும் உடல் கல்வி விஞ்ஞானமும்/ விஞ்ஞானம் உட்பட (6) ஆறு பாடங்களில் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் சித்தி பெற்றுள்ள உள்ளூராட்சி மன்றம் ஒன்றில் நிரந்தரப் பதவி வகிக்கும் ஒருவர். |

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிடமாக உள்ள பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டமும் சம்பளக் குறியீடும் | கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | (இ) உள்ளூராட்சி மன்றம் ஒன்றில் 10 வருடங்களுக்கு குறையாது தொடர்ச்சியான சேவைக்காலம் உள்ள ஒருவராக இருக்கும் பட்சத்தில் 8 ஆம் வகுப்பு சித்திபெற்றிருத்தல். |
| 2 | சாரதி தரம் II 'B' | 1 | PL 3 - 2006A ரூ.12,470-130×10-145×10-160×10-170×12 = ரூபா 18,860 | (1) இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாதவாறு க. பொ. த. (சா. த.) பரீட்சையில் 2 திறமைச் சித்திகள் உட்பட 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். (ஒரு அமர்வில் குறைந்தபட்சம் 5 பாடங்கள் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.)<br><br>(2) தனியார்/கூலி வாகனம் மற்றும் வெற்று வாகன நிறை 24 அந்தருக்கு குறைந்த ஸ்டேசன் வெகன் வண்டி ஓட்டுதல் தொடர்பாக மோட்டார் வாகன ஆணையாளரினால் வழங்கப் பட்ட தேர்ச்சி பற்றிய சான்றிதழ் பெற்றிருத்தல். (ட்ரெக்டர் வண்டி மற்றும் முச்சக்கர வண்டி)<br><br>(3) வாகன சாரதியாக மூன்று வருட அனுபவம் இருக்க வேண்டும் (சான்றிதழ் மூலம் சேவை அனுபவத்தை நிரூபிக்க வேண்டும்.)<br><br>(4) குறைந்தபட்சம் உயரம் 5 அடி ஆக இருத்தல் வேண்டும்.<br><br>(5) பகல்/இரவு நேரங்களில் சேவை புரிவதற்கு பொருத்தமான உடல் நலம் கொண்டவராகவும் சிறந்த கண் பார்வையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.<br><br>(6) பெருந்தெருக்கள் சட்டக்கோவை தொடர்பாக சிறந்த அறிவுடையவராக இருத்தல் வேண்டும். |
| 3 | தகனபீட செயற்பாட்டாளர் | 2 | PL2 - 2006A ரூ.12,210-130×10 – 10×145-10×160-12×170= ரூபா 18,600 | தேசிய கல்விப் பொது தராதரப்பத்திர பரீட்சையில் அல்லது கல்விப் பொது தராதரப் பத்திர (சா.த.) பரீட்சையில் ஏதேனும் இரண்டு பாடங்கள் சித்திபெற்றிருத்தல் மற்றும் அட்டவணையில் குறிப் பிடப்படும் ஒவ்வொரு பதவிக்காக குறைந்தபட்சம் இரண்டு வருடங்கள் அனுபம் இருத்தல். (அரசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனமொன்றின் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.) இலக்கம் 1 உப அட்டவணை இணைக்கப்பட்டுள்ளது. |
| 4 | நூலக உதவியாளர் அலுவலக வேலை உதவியாளர் தரம் II | 1 | PL1 - 2006A ரூ.11,730-120×10 – 130×10-145×10-160×12= ரூபா 17,600 | கல்விப் பொது தராதரப்பத்திரம் (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். |
| 5 | அலுவலக வேலை உதவியாளர் தரம் II | 2 | PL1 - 2006A ரூ.11,730-120×10 – 130×10-145×10-160×12= ரூபா 17,600 | கல்விப் பொது தராதரப்பத்திரம் (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். |
| 6 | காவலாளர் அலுவலக வேலை உதவியாளர் தரம் II | 2 | PL1 - 2006A ரூ.11,730-120×10 – 130×10-145×10-160×12= ரூபா 17,600 | கல்விப் பொது தராதரப்பத்திரம் (சா. த.) பரீட்சையில் ஒரே அமர்வில் ஏதேனும் 6 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். |

| தொடர் இலக்கம் | பதவிப் பெயர் | வெற்றிடமாக உள்ள பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத் திட்டமும் சம்பளக் குறியீடும் | கல்வித் தகைமைகள் மற்றும் ஏனைய தகைமைகள் |
|---|---|---|---|---|
| 7 | தகனபீட செயற்பாட்டு உதவியாளர் தரம் III | 03 | PL1 - 2006A ரூ.11,730-120×10– 130×10-145×10- 160×12= ரூபா 17,600 | குறைந்தபட்சம் 8 ஆம் தரம்/ 9 ஆம் ஆண்டு சித்திபெற்றிருத்தல் வேண்டும். |
| 8 | வேலைத்தள/ கள தொழிலாளர் தரம் III | 10 | PL1 - 2006A ரூ.11,730-120×10– 130×10-145×10- 160×12= ரூபா 17,600 | குறைந்தபட்சம் 5 ஆம் தரம்/ 6 ஆம் ஆண்டு சித்திபெற்றிருத்தல் வேண்டும். |
| 9 | சுகாதார தொழிலாளர் தரம் III | 05 | PL1 - 2006A ரூ.11,730-120×10– 130×10-145×10- 160×12= ரூபா 17,600 | சுகாதாரத் தொழிலாளர்களுக்காக கல்வித் தகைமை கவனத்தில் கொள்ளப்படமாட்டாது. |

**ஆட்சேர்ப்பு முறை.-**

(1) பதவிகளுக்காக உரிய தகைமைகள் பூர்த்தியாகும் விண்ணப்பதாரர்களுள் முறையான நேர்முகப் பரீட்சையின் மூலம் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர் ;

(2) உரிய தகைமைகளை கொண்ட விண்ணப்பதாரர்கள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள்;

(3) ஹோமாகம பிரதேச சபையில் ஏற்கனவே செயற்திட்ட அளவில் சேவைபுரிகின்றவர்கள் மற்றும் ஹோமாகம பிரதேச சபை அதிகார எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடமுடையவர்கள் தொடர்பாக முன் உரிமை அளிக்கப்படும் ;

(4) சாரதி பதவிகளுக்காக இணைத்துக்கொள்ளும்போது முறையான நேர்முகப் பரீட்சைக்கு மேலதிகமாக மோட்டார் வாகன திணைக்களத்தின் பரிசோதகர் ஒருவர் மற்றும் பொலிஸ் போக்குவரத்துப் பிரிவின் அலுவலர் ஒருவர் உள்ளடங்கும் குழுவொன்றின் முன் நடாத்தப்படுகின்ற வாகனம் ஓட்டுதல் பற்றிய தேர்ச்சிப் பரீட்சையில் சித்திபெறுதல் வேண்டும். அங்கு டிரக்டர் வண்டி ஓட்டும் இயலுமை பற்றியும் விசேடமாக கவனத்தில் கொள்ளப்படும் ;

சுகாதார மேற்பார்வையாளர் பதவிக்காக இணைத்துக்கொள்ளும் போது விண்ணப்பதாரிகள் எழுத்துமூல பரீட்சைக்கும் தோற்ற வேண்டும்.

எழுத்து மூல பரீட்சை கீழ்க் காணும் பாடவிதானங்களுக்கு அமைவாக நடைபெறும்:-

(i) பொது நுண்ணறிவு - 1 1/2 மணித்தியால வினாப் பத்திரம் ;
(ii) பொது அறிவு - 1 மணித்தியால வினாப் பத்திரம்.

எழுத்துமூல பரீட்சையில் அதிகூடிய புள்ளிகளைப் பெறுகின்றவர்கள் நேர்முகப் பரீட்சைக்காக அழைக்கப்படுவார்கள். அவர்களுள் தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

(5) பூரணமாக பூர்த்திசெய்யப்படாத அல்லது சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படாத அல்லது உரிய தகைமைகளை கொண்டிராத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

பீ. எஸ். பீ. பர்னாந்து,
செயலாளர் (பதில்),
ஹோமாகம பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஹோமாகம,
2014.

*மாதிரி விண்ணப்பப்படிவம்*

**ஹோமாகம பிரதேச சபை**

*மேல் மாகாண அரச சேவையின்.................................... பதவிக்கான விண்ணப்பம்*

1. முதலெழுத்துடன் பெயர் :-----.
2. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் :-----.
3. நிரந்தர விலாசம் :-----.
4. நிரந்தர வதிவிட மாவட்டம் :-----.
5. தேசிய ஆள் அடையாள அட்டை இலக்கம் :-----.
6. பிறந்த திகதி :- வருடம் :----- மாதம் :----- நாள் :-----.
7. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி திகதியன்று வயது :-----.
   வருடங்கள் :----- மாதங்கள் :----- நாட்கள் :-----.
8. ஆண்/பெண் :-----.
9. திருமணமானவர்/திருமணமாகாதவர் :-----.
10. இலங்கைப் பிரசையாகுவது பிறப்பினாலா அல்லது பதிவினாலா? :-----.
11. கல்வித் தகைமைகள் : (சான்றிதழ்களின் பிரதிகளை இணைத்தல் வேண்டும்) :-----.
    க. பொ. த. (சா.த.) பரீட்சை
    சித்திபெற்ற ஆண்டு :-----. பரீட்சை சுட்டெண் :-----.

| தொடர் இல. | பாடம் | சித்தி | தொடர் இல. | பாடம் | சித்தி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

க. பொ. த. (உ. த.) பரீட்சை :-

சித்திபெற்ற ஆண்டு:-----. பரீட்சை சுட்டெண் :-----.

| தொடர் இல. | பாடம் | சித்தி |
|---|---|---|
| | | |

12. (1) ஏனைய கல்வித் தகைமைகள் :----.
    (2) தொழிற்தகைமைகள் :----.
    (3) ஏனைய தகைமைகள் :----.
    (சாரதி பதவிக்காக)
    (i) சாரதி அனுமதிப் பத்திர இலக்கம் :----.
    (ii) அனுமதி பத்திரத்தின் வகுப்பு :----.
    (iii) அனுமதி பத்திரம் செல்லுபடியாகும் காலம் :----.

13. நீங்கள் ஏற்கனவே இந்த பிரதேச சபையில் சேவை புரிகின்றவர் என்றால் :-

(i) தற்சமயம் வகிக்கும் பதவி :----.

(ii) நிரந்தர/அமைய/தற்காலிக/ஒப்பந்த/பதிலீடு என்பது பற்றி :-----.

(iii) அந்தப் பதவியில் நியமிக்கப்பட்ட திகதி :----.

(iv) சேவை நிரந்தரமாக்கப்பட்டுள்ளது என்றால் அந்தக் கடிதத்தின் இலக்கமும் திகதியும் :----.

14. நீங்கள் எப்போதாவது குற்றமொன்று தொடர்பாக நீதிமன்றத்தில் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீரா? :-----.

இந்த விண்ணப்பப் படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் நான் அறிந்தளவில் உண்மையானதும் பிழையற்றதும் என உறுதிமொழிகிறேன். மேலே குறிப்பிடப்படும் தகவல் பிழையானது என நிரூபிக்கப்பட்டால் நான் சேவைக்கு தேர்ந்தெடுக்கப்பட முன்னராயின் தகுதியற்றவராவேன் என்பதையும், நியமனம் பெற்ற பின்னர் நிரூபிக்கப்பட்டால் எவ்வித நட்டஈடுமின்றி சேவையில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் நன்கு அறிவேன்.

-------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :-----.

**ஏற்கனவே அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களுக்கான திணைக்களத் தலைவரின் சான்றிதழ் :**

இந்த விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி....................................... இந்த நிறுவனத்தில் ......................... ஆக சேவை புரிகின்றார். இந்தப் பதவிக்காக இவர் தெரிவு செய்யப்பட்டால் இவரை விடுவிக்க முடியும்/முடியாது. இவர் எந்தவொரு தண்டனைக்கும் உட்படுத்தப்படாதவர் என உறுதிப்படுத்துவதோடு, விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

-------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

நிறுவனம் :-----.
பெயர் :-----.
பதவி :-----.
திகதி :-----.

**அட்டவணை**

1. முதல்கலவை (premix) இயந்திர செயற்பாட்டாளர்
2. அஸ்போல்ற் இயந்திர செயற்பாட்டாளர்
3. உதவி அஸ்போல்ற் இயந்திர செயற்பாட்டாளர்
4. தண்ணீர் பம்ப் செய்கின்ற தொழில்நுட்பவியலாளர்
5. அஸ்போல்ற் மிலிங் மெசின் லெவலர்
6. அஸ்போல்ற் பேவர் ஸ்கிரேமன்ட்
7. தர்மோ பிளாஸ்டிக் மெசின் ஒபரேற்றர்
8. பித்துமன்ற் ஸ்பிரேமன்ற்
9. மின் பிறப்பாக்கி இயந்திர செயற்பாட்டாளர்
10. டயர் நிரப்புணர்
11. எரிபொருள் பரிசோதகர்
12. பளபளப்பு செய்பவர் (polisher)
13. வரைபடம் அச்சிடுபவர்
14. மலசலக்குழாய் தொழிலாளர்
15. சுரங்க இயந்திர தொழிலாளர்
16. சித்திரக்கலைஞர்
17. ஒலிபெருக்கி இயந்திர செயற்பாட்டாளர்
18. மரம் வெட்டுபவர்
19. கட்டில் நாற்காலிகளுக்கு மெத்தை அமைப்பவர் (Upholster)

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**மஹரகம நகர சபை**

*நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படியிலான அறிவித்தல்*

நகரசபை கட்டளைச் சட்டத்தின் (255 ஆம் அத்தியாயம்) 50 ஆம் மற்றும் 52 ஆம் பிரிவுகளின் நியதிகளின்படி மேல் மாகாணத்தில் கொழும்பு மாவட்டத்தில் உள்ள மஹரகம பிரதேச செயலாளர் பிரிவில் மஹரகம நகரசபையின் எல்லைகளில் அமைந்துள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபைக்கு உரிய வீதிகளாக பிரகடனப்படுத்தப்படல் வேண்டும் என்று பொதுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதன்படி அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகர சபையினால் உடைமையாக்கப்படுகின்றன என்று இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

2. பொதுமக்கள் அல்லது உரிய காணி உடைமையாளர்களிடமிருந்து இந்த விடயம் குறித்து ஏதேனும் ஆட்சேபனை இருப்பின் அத்தகைய ஆட்சேபனைகள் தொடர்பான காரணங்கள் வர்த்தமானியில் இந்த அறிவித்தல் பிரகரிக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத காலப் பகுதியினுள் எழுத்து மூலம் கொடுக்கப்படல் வேண்டும்.

3. ஆட்சேபனைகள் எதுவும் குறிப்பிடப்பட்ட காலப்பகுதியினுள் தெரிவிக்கப்படாவிடில் அட்டவணையில் குறிப்பீடு செய்யப்பட்ட வீதிகள் மஹரகம நகரசபைக்கு சொந்தமானதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு கட்டுப்படுத்தப்படும் என்று இத்தால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுகின்றது.

காந்தி கொடிகார,
தலைவர்,
மஹரகம நகரசபை.

நகர சபை அலுவலகம்,
மஹரகம,
2014, யூன் 23.

**அட்டவணை**

பாதையின் பெயர் :- பன்னிபிட்டிய கொட்டாவை மாலபே பாதை இல. 720/2 முதல் 1631/3 வரையுள்ள வீடுகள் அமைந்திருக்கும் வழி.

| | | |
|---|---|---|
| ஆரம்பம் | : | 109 |
| முடிவு | : | 103/5 |
| நீளம் | : | 560 அடி |
| அகலம் | : | 15 அடி |

பாதையின் பெயர் :- கொட்டாவை அத்துருகிரிய பாதை சாம மாவத்தை இடது பக்கத்தில் உள்ள இலக்கம் 656/7 முதல் 656/ஏ வரையுள்ள வீடுகள் அமைந்துள்ள கிளை வழி.

| | | |
|---|---|---|
| ஆரம்பம் | : | 656/A |
| முடிவு | : | 656/7 |
| நீளம் | : | 226 அடி |
| அகலம் | : | 15 அடி |

பாதையின் பெயர் :- பன்னிபிட்டிய ஹோகந்தரை பாதையில் பெரோடாவத்தை இலக்கம் 1488 கொண்ட வீடு அமைந்துள்ள வழி.

| | | |
|---|---|---|
| ஆரம்பம் | : | 5/28 |
| முடிவு | : | 28/14 |
| நீளம் | : | 86 மீற்றர் |
| அகலம் | : | 3.35 மீற்றர் |

பாதையின் பெயர் :- ருக்மலை நுகேகொடை பாதை கிளை வழி ஆரம்பம் முதல் இலக்கம் 155/1 வரையுள்ள வழி.

| | | |
|---|---|---|
| ஆரம்பம் | : | நுகேமுல்லை பாதை கிளை வழி |
| முடிவு | : | - |
| நீளம் | : | 95.0 மீற்றர் |
| அகலம் | : | 3.0 மீற்றர் |

*பாதையின் பெயர் :- நுகேகொடை மிரிஹானை பழைய கொட்டாவை பாதை இலக்கம் 277/13 முதல் 277/20 வரையுள்ள வழி.*

| | |
|---|---|
| ஆரம்பம் | : 277/15 |
| முடிவு | : 277/24A |
| நீளம் | : 240 அடி |
| அகலம் | : 15 அடி |

*பாதையின் பெயர் :- கோட்டை மாதிவலை தலவத்துகொடை பாதை கமகே மாவத்தைக்கு தொடர்பான வ. ம. இல. 399/7 முதல் 399/12 வரையுள்ள வீடுகள் அமைந்துள்ள வழி.*

| | |
|---|---|
| ஆரம்பம் | : 399/1 |
| முடிவு | : 399/6A |
| நீளம் | : 346 அடி |
| அகலம் | : 10 அடி |

*7-232*

---

**கொழும்பு மாநகர சபை**

*ஊன் வினைஞர் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 272)*

*இணைக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெயர்களுக்கு முன்பாக காணப்படும் விபரங்களின் படி அந்தந்த விலாசங்களில் 2014 ஆம் ஆண்டு இறைச்சிக்கடைகள் நடாத்துவதற்கு இறைச்சிக்கடை அனுமதிப்பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. இந்த அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு கொழும்பு நகரில் வசிக்கும் எவராவது எதிர்ப்பு தெரிவிக்க விரும்பின் அவை எழுத்து மூலம் இரண்டு பிரதிகளுடன் தயாரிக்கப்பட்டு அறிவித்தலில் காணப்படும் திகதியிலிருந்தும் 14 நாட்களுக்குள் என்னை வந்து சேரும் வகையில் அனுப்புதல் வேண்டும். ஊன்வினைஞர் கட்டளைச் சட்டத்தின் (272 ஆம் அத்தியாயம்) 7 (2) ஆவது பிரிவின்படி இவ்வறிவிப்பு விடுக்கப்படுகின்றது.*

*அஹமட் ஜமல்டீன் மொஹொமட் முசம்மில்,*
*மாநகர முதல்வர்,*
*கொழும்பு மாநகர சபை.*

*நகர மண்டபம்,*
*கொழும்பு 07.*
*2014, யுன் 24.*

***அட்டவணை***

***பிரத்தியேக மாட்டிறைச்சிக் கடைகள் :***

| பெயர் | விலாசம் |
|---|---|
| 1. ஜே. கே. மார்கடிங் சர்விஸ் - கீல்ச் புட் ப்ரடக்ட் பீ எல் சீ | இல. 148, வொக்ஷோல் வீதி, கொழும்பு 02 |

*7-378*

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.